**ஜூன் – 27**

# TNPSC துளிகள்

- மத்திய உள்துறை அமைச்சர் உத்தரப் பிரதேசத்தின் வாரணாசியில் நடைபெற்ற மத்திய மண்டல சபையின் 25வது கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்.
- இராஜஸ்தான், மத்தியப் பிரதேசம் மற்றும் குஜராத் ஆகிய மாநிலங்களின் பழங்குடி மக்கள் மும்மைச் சந்திப்பில் நான்கு நாட்கள் அளவிலான பீஜ் உத்சவ் 2025 (விதைத் திருவிழா) என்ற திருவிழாவானது நடைபெற்றது.
- ஈரான் நாடானது, கத்தாரில் உள்ள அல்-உதெய்த் விமானப் படைத் தளத்தைக் குறி வைத்து பஷாயர் அல்-ஃபாத் எனும் நடவடிக்கையினைத் தொடங்கியது.
- 48 நாடுகளைச் சேர்ந்த வானூர்திப் பொறியாளர்களின் ஒரு மிகப்பெரிய கூட்டமான சர்வதேசப் பாரிஸ் விமானக் கண்காட்சியானது பிரான்சில் நடைபெற்றது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## புதுப்பிக்கப்பட்ட வள்ளுவர் கோட்டம்




- புதிதாக புணரமைக்கப்பட்ட வள்ளுவர் கோட்டத்தினைத் தமிழக முதல்வர் சமீபத்தில் திறந்து வைத்தார்.
- வள்ளுவர் கோட்டம் ஆனது செம்மொழி தமிழ் கவிஞர் தத்துவஞானி வள்ளுவருக்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.
- இது 1976 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் அப்போதைய இந்தியக் குடியரசுத் தலைவர் ஃபக்ருதீன் அலி அகமது அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.
- இது தென்னிந்தியப் பாரம்பரியக் கட்டிடக் கலைஞரான V. கணபதி ஸ்தபதியால் வடிவமைக்கப் பட்டது.

## புதிய வகை பருப்பு விதைகள்

- விதை தரச் சான்றிதழ் மற்றும் இயற்கை முறை வேளாண் சார் சான்றிதழ் துறை ஆனது, கான்பூர் ஆராய்ச்சி நிறுவனத்திலிருந்து வாங்கப்பட்ட புதிய வகை பருப்பு விதைகளைச் சீர்படுத்தியுள்ளது.

- மஞ்சள் தேமல் நோய் தாக்குதல்கள் குறித்த அச்சம் இல்லாமல், பச்சைப்பயறு மற்றும் உளுந்து சாகுபடியை மேற்கொள்வதற்கு வேண்டி விவசாயிகளை ஊக்குவிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- LGG 600 எனும் பச்சைப் பயறு வகையானது, நன்றாக வளர்ந்து 28வது நாளில் சீரான வளர்ச்சியுடன் பூக்கும் நிலையை எட்டியுள்ளது.
- கோட்டா 5 என்ற உளுந்துப் பயறு வகையானது, நோய் எதிர்ப்பு சக்தி கொண்டதாகக் கண்டறியப் பட்டது.



Officials explaining to farmers the salient features of a green variety in a demonstration plot

# தேசியச் செய்திகள்

## பயிற்சியாளர்களுக்கான பயிற்சி (ToT) திட்டம் 2025




- பஞ்சாயத்து ராஜ் துறை அமைச்சகமானது, சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழாவின் (ஆசாதி கா அம்ரித் மஹோத்சவ்) கீழ் பயிற்சியாளர்களுக்கான பயிற்சி (ToT) என்ற ஒரு திட்டத்தைத் தொடங்கியது.
- பஞ்சாயத்துகளுக்காக என சொந்த ஆதார வருவாயை (OSR) உருவாக்கும் ஒரு திறனை மேம்படுத்துவதில் இது கவனம் செலுத்துகிறது.
- இந்தத் திட்டம் ஆனது இராஷ்ட்ரிய கிராம ஸ்வராஜ் அபியான் (RGSA) திட்டத்தின் கீழ் அமல்படுத்தப்படுகிறது.
- அகமதாபாத்தில் உள்ள இந்திய மேலாண்மை கல்வி நிறுவனத்துடன் (IIM) இணைந்து

இது நடத்தப்படும்.

- பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளின் மீதான நிதி சார் அதிகாரமளிப்பு மூலம் அடித்தட்டு நிலையிலான நிர்வாகத்தினை வலுப்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

## e-Rakt Kosh

- மத்திய சுகாதாரத் துறை அமைச்சகமானது இந்திய அரிய ரத்தத் தானம் செய்பவர்கள் பதிவேட்டை (RDRI), e-Rakt Kosh எனும் தேசிய இரத்த வங்கி மேலாண்மை தளத்துடன் ஒருங்கிணைக்கத் திட்டமிட்டுள்ளது.
- e-Rakt Kosh ஆனது தேசிய சுகாதாரத் திட்டத்தின் (NHM) கீழ் உருவாக்கப்பட்டது.
- இது இரத்த வங்கிகள், இரத்தம் கிடைக்கும் தன்மை மற்றும் இரத்த தான முகாம்கள் பற்றிய நிகழ்நேரத் தகவல்களை வழங்குகிறது.
- இரத்தக் குழுவானது, மிகவும் இணக்கமான நன்கொடையாளர்களுக்கான அணுகலை எளிதாக்குவதன் மூலம் பாம்பே, Rh-null மற்றும் P-Null போன்ற சில அரிய இரத்த வகைகளைக் கொண்ட மக்களுக்குப் பயனளிப்பதை இது நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- RDRI ஆனது இந்திய மருத்துவ ஆராய்ச்சிச் சபையின் தேசிய குருதிக் கோளாறு சார்-தடுப்பாற்றலியல் நிறுவனம் (NIIH) மற்றும் நான்கு கூட்டு நிறுவனங்களால் உருவாக்கப் பட்டது.





## SC/ST ஆர்வலர்களுக்கான சிறப்பு PhD சேர்க்கை இயக்கம்

- டெல்லியில் உள்ள இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகமானது பட்டியலிடப்பட்டச் சாதியினர் (SC) மற்றும் பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் (ST) பிரிவுகளைச் சேர்ந்த PhD ஆர்வலர்களுக்கான முதல் சிறப்பு சேர்க்கை இயக்கத்தினைத் தொடங்கியுள்ளது.
- முனைவர் மீதான பட்டப் படிப்பில் தொடர்ந்து நிலவி வரும் SC/ST மாணவர்களுக்கான சேர்க்கை இடப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதே இந்த முக்கிய முன்னெடுப்பின் நோக்கமாகும்.
- அரசாங்க இடஒதுக்கீடு விதிகளின் படி, இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகங்கள் உயர்கல்வி சேர்க்கையில் SC பிரிவினருக்கு 15% இடங்களையும் ST பிரிவினருக்கு 7.5% இடங்களையும் ஒதுக்க வேண்டும்.

- இருப்பினும், டெல்லியின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் தரவு, PhD கல்வி நிலையில் பதிவான உண்மையான SC/ST சேர்க்கையானது இந்த இலக்குகளை விட குறைவாக இருப்பதைக் காட்டுகிறது.
- 2015-16 முதல் 2024-25 ஆம் ஆண்டு வரை, SC சேர்க்கை 8.88 சதவீதத்திலிருந்து 9.69% ஆகவும், ST சேர்க்கை 0.97 சதவீதத்திலிருந்து 3.28% ஆகவும் உயர்ந்துள்ளது.




## NAVYA திட்டம்




- மத்திய அரசானது, உத்தரப் பிரதேசத்தின் சோன்பத்ராவில் NAVYA (இளைய வளரிளம் பருவப் பெண்களுக்கான தொழில் பயிற்சி மூலம் ஊக்கத்தைத் தூண்டுவது) என்ற ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்தியது.
- குறைந்தபட்சம் 10 ஆம் வகுப்பு பயின்ற 16 முதல் 18 வயது வரையிலான சிறுமிகளுக்கு தொழில் பயிற்சி அளிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- புதிய தொழில் முறை வாய்ப்புகளை உருவாக்குவதற்காக என்று மரபுசாரா வேலை வாய்ப்புகளில் பெண்களுக்குப் பயிற்சி அளிப்பதில் கவனம் செலுத்தப்படுகிறது.
- NAVYA திட்டம் ஆனது, பெண்கள் தலைமையிலான மேம்பாட்டினை ஊக்குவிப்பதன் மூலம் விக்ஸித் பாரத்@2047 திட்டத்தின் தொலைநோக்கு திட்டமிடலை ஆதரிக்கிறது.
- இது பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் (MWCD) மற்றும் திறன்

மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் அமைச்சகம் (MSDE) ஆகியவற்றின் ஒரு கூட்டு சோதனை முன்னெடுப்பாகும்.

- இந்தத் திட்டமானது வடகிழக்குப் பிராந்தியத்தில் உள்ள சில இலட்சிய நோக்கமுள்ள மாவட்டங்கள் மற்றும் பகுதிகள் உட்பட 19 மாநிலங்களில் உள்ள 27 மாவட்டங்களை உள்ளடக்கும்.

# பொருளாதாரச் செய்திகள்

## எண்ணிமப் பண வழங்கீட்டு புலனாய்வு தளம் (DPIP)

- முக்கியமான இந்திய வங்கிகள் ஆனது, எண்ணிமப் பண வழங்கீட்டு கண்காணிப்பு/ புலனாய்வுத் தளத்தினை (DPIP) உருவாக்குவதற்காக என்று இந்திய ரிசர்வ் வங்கியுடன் இணைந்து செயல்படுகின்றன.
- நிகழ்நேரப் புலனாய்வுப் பகிர்வு மூலம் எண்ணிமப் பண வழங்கீட்டு மோசடிகளைக் குறைப்பதே இதன் குறிக்கோள் ஆகும்.
- பாதுகாப்பானப் பரிவர்த்தனைகளுக்கான எண்ணிமப் பொது உள்கட்டமைப்பாக DPIP செயல்படும்.
- இந்திய ரிசர்வ் வங்கியின் புத்தாக்க மையம் (RBIH) ஆனது, 5 முதல் 10 வங்கிகளுடன் இணைந்து இதற்கான முன்மாதிரியை உருவாக்கி வருகிறது.
- மோசடியைக் கண்டறிந்து தடுக்க என்று இந்தத் தளம் செயற்கை நுண்ணறிவு மற்றும் பகுப்பாய்வு போன்ற மேம்படுத்தப் பட்ட தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தும்.
- 2025 ஆம் நிதியாண்டில், வங்கி மோசடிகளில் சிக்கிய மொத்தத் தொகை 36,014 கோடி ரூபாயாக உயர்ந்தது என்ற நிலையில் இது 2024 ஆம் நிதியாண்டில் பதிவான 12,230 கோடி ரூபாயை விட கிட்டத்தட்ட மூன்று மடங்கு அதிகமாகும்.





## அதிகரிக்க உள்ள மாநிலங்களின் மூலதனச் செலவினம்

- 2025 ஆம் நிதியாண்டில் 8.7 டிரில்லியன் ரூபாயாக இருந்த 26 இந்திய மாநிலங்களின் மூலதனச் செலவினமானது, 2026 ஆம் நிதியாண்டில் சுமார் 10.2 டிரில்லியன் ரூபாயாக அதிகரிக்கும்.
- இந்த மொத்த மூலதனச் செலவில் ஐந்துக்கும் மேற்பட்ட மாநிலங்கள் சுமார் 50% என்ற

அளவில் அதன் பங்கினைக் கொண்டிருக்கும்.

- மொத்த மூலதனச் செலவில் உத்தரப் பிரதேசம் மட்டும் 16.3% பங்கினைக் கொண்டு இருக்கும்.
- 2025 ஆம் நிதியாண்டில், மிகவும் அதிகப் பங்கினை கொண்ட முதல் ஐந்து மாநிலங்கள் உத்தரப் பிரதேசம் (16.9%), மகாராஷ்டிரா (10.9%), குஜராத் (8.1%), மத்தியப் பிரதேசம் (7.5%) மற்றும் ஒடிசா (6.4%) ஆகியனவாகும்.
- நாகாலாந்து, இமாச்சலப் பிரதேசம் மற்றும் சிக்கிம் ஆகியவை 2026 ஆம் நிதியாண்டில் மூலதனச் செலவினத்தில் 0.4% மட்டுமே பங்களிக்கும்.
- 26 மாநிலங்களின் மொத்த வருவாய் ஆனது 2026 ஆம் நிதியாண்டில் சுமார் 69.4 டிரில்லியனாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- இது 2025 ஆம் நிதியாண்டை விட 10.6% அதிகமாகும்.
- வருவாய் வரவுகளானது 12.3% அதிகரிக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- மூலதன வரவானது 6.6% அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- மத்தியப் பிரதேசம், கர்நாடகா மற்றும் இராஜஸ்தான் ஆகியவை தலா 5.9% என்ற ஒரு அளவிற்குப் பங்களிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- 2025 ஆம் நிதியாண்டில் மிகவும் அதிகப் பங்களிப்பை வழங்கிய தமிழ்நாடு, 2026 ஆம் நிதியாண்டில் முதல் ஐந்து இடங்களில் இடம் பெறாது.





# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## இஸ்ரோவிலிருந்து SSLV தொழில்நுட்பப் பரிமாற்றம்

- இஸ்ரோவிலிருந்து SSLV தொழில்நுட்பப் பரிமாற்றத்திற்கான ஏலத்தினை இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிமிடெட் (HAL) நிறுவனம் கைப்பற்றியது.
- இதன் மூலம் இந்நிறுவனமானது சிறிய செயற்கைக்கோள் ஏவு வாகனத்தின் (SSLV) ஒரே உற்பத்தியாளராகிறது.
- இதன் முழு தொழில்நுட்பப் பரிமாற்றச் செயல்முறை நிறைவடைய சுமார் இரண்டு ஆண்டுகள் ஆகும்.
- SSLV என்பது இஸ்ரோ நிறுவனத்தினால் உருவாக்கப்பட்ட ஒரு சிறிய மற்றும் செலவு

குறைந்த ஏவுகலம் ஆகும்.

- இது சிறிய செயற்கைக் கோள்களை புவி தாழ் மட்டச் சுற்றுப்பாதையில் விரைவாக உட்செலுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.
- அவசர செயற்கைக் கோள், குறிப்பாகப் பாதுகாப்புப் பயன்பாட்டிற்கான செயற்கைக் கோள்களின் ஏவுதல் தேவைகளைப் பூர்த்தி செய்ய SSLV உதவுகிறது.





# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## WMO அமைப்பின் ஆசியாவில் பருவநிலை குறித்த தகவல் அறிக்கை 2024


- 2024 ஆம் ஆண்டானது பரவலான, நீடித்த வெப்ப அலைகளுடன் ஆசியாவில் பதிவான வெப்பமான ஆண்டாகும்.
- 2024 ஆம் ஆண்டில் உலகளாவியச் சராசரி வெப்பநிலை 1850–2024 வரை மிக அதிகமாக இருந்தது.
- இது 2023 ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட 1.45°C வெப்பநிலையினைத் தாண்டியது.
- ஆசியாவில், உலகச் சராசரியை விட சுமார் இரண்டு மடங்கு வேகமாக வெப்பமடைந்த கடல் மேற்பரப்பு வெப்பநிலை இதுவரை இல்லாத அளவிலான உச்சத்தை எட்டியது.
- ஆசியாவின் பசிபிக் மற்றும் இந்தியப் பெருங்கடல் கடற்கரைகளில் கடல் மட்ட உயர்வு உலகச் சராசரியை விட அதிகமாக இருந்தது.
- இமயமலை மற்றும் தியான் ஷானில் கண்காணிக்கப்பட்ட 24 பனிப்பாறைகளில் 23 அதன் பனிப் பரவலை இழந்தது என்பதோடு இது பனிப்பாறை ஏரி வெடிப்பினால் ஏற்படும் வெள்ளம் (GLOF) மற்றும் நிலச்சரிவு அபாயங்களை அதிகரித்தது.
- 2024 ஆம் ஆண்டில், கடல்சார் வெப்ப அலைகள் பெரும்பாலான ஆசியப் பெருங்கடல் பகுதிகளைப் பாதித்தன.
- ஐக்கிய அரபு அமீரகத்தில், 24 மணி நேரத்தில் 259.5 மிமீ மழைப் பொழிவு பதிவானது என்பதோடு இது 1949 ஆம் ஆண்டிற்குப் பிறகு ஏற்பட்ட மிகவும் கடுமையான சில நிகழ்வுகளில் ஒன்றாகும்.
- 2024 ஆம் ஆண்டில் இந்திய நாடு முழுவதும் மின்னல் தாக்கியதில் சுமார் 1,300 பேர் கொல்லப் பட்டனர் என்ற நிலையில் ஜூலை 10 ஆம் தேதியன்று 72 பேர் உயிரிழந்தனர்.
- சீனாவில் ஏற்பட்ட வறட்சி ஆனது சுமார் 4.8 மில்லியன் மக்களைப் பாதித்தது மற்றும்

நேரடியாக 2.89 பில்லியன் சீன யுவான் (CNY) மதிப்பிலான இழப்பினை ஏற்படுத்தியது.




# மாநிலச் செய்திகள்

## திரிபுரா - முழு கல்வியறிவு நிலை





- ULLAS - நவ பாரத் சாக்சார்த்த காரியக்ரம் திட்டத்தின் கீழ் திரிபுரா முழு கல்வியறிவு நிலையைப் பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- மிசோரம் மற்றும் கோவாவிற்குப் பிறகு ஒரு முழு கல்வியறிவு நிலையை எட்டிய இந்தியாவின் மூன்றாவது மாநிலம் இதுவாகும்.
- 1961 ஆம் ஆண்டில் வெறும் 20.24% ஆக இருந்த மாநிலத்தின் கல்வியறிவு விகிதமானது, தற்போது 95.6% ஆக உயர்ந்துள்ளது.
- ULLAS என்பது 2022 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு, 2027 ஆம் ஆண்டு வரை அமலில் இருக்கும் மத்திய அரசின் நிதியுதவி பெறும் திட்டமாகும்.
- இந்த முக்கியத் திட்டமானது, கல்வியறிவு இல்லாத இளையோர்கள் மற்றும் வளரிளம்

பருவத்தினர் (15+ வயது) ஆகியோரை மேம்படுத்துவதை ஒரு நோக்கமாகக் கொண்டு உள்ளது.

- இது அடிப்படைக் கல்வியறிவு, எண்ணறிவு மற்றும் மிகவும் முக்கியமான வாழ்க்கைத் திறன்களில் கவனம் செலுத்துகிறது.

## திருநர் சமூகத்திற்கு OBC அந்தஸ்து




- அசாம் மாநிலத்தில் திருநர் சமூகத்திற்கு இதரப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (OBC) அந்தஸ்து வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
- இந்த நடவடிக்கையானது கல்வி, வேலைவாய்ப்புகள் மற்றும் நலத்திட்டங்களுக்கான அணுகலை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மேலும் கூடுதலாக, பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறையில் மேற் பார்வையாளர்-நிலை போன்ற பதவிகளில் சுமார் 50% என்ற அளவானது அங்கன்வாடி பணியாளர்களுக்கு ஒதுக்கப் படும்.
- இந்த மேற்பார்வையாளர் பணி நிலைகள் ஒருங்கிணைந்த குழந்தை மேம்பாட்டுச் சேவைகள் (ICDS) திட்டத்தின் ஒரு பகுதியாகும் என்பதோடு தற்போதைய அடிமட்ட நிலை பதவிகளில் இருந்து வரும் நபர்களுக்குப் பதவி உயர்வு வழங்குகின்றன.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## JCB இலக்கிய விருது நிறுத்தம்

- எதிர்கால விருதுகள் எதுவும் திட்டமிடப்படாததுடன், இலக்கியத்திற்கான JCB பரிசு ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு நிறுத்தப்பட்டுள்ளது.
- மொழியியல் பன்முகத் தன்மையை ஊக்குவிப்பதற்காகவும் மொழிபெயர்ப்புகளை இனி நன்கு அங்கீகரிப்பதற்காகவும் இந்தப் பரிசு வழங்கப்பட்டது.
- இது 2018 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.

- JCB இந்தியா நிறுவனம் நிதியுதவி வழங்கி வந்த இந்தப் பரிசானது, இலாப நோக்கற்ற அமைப்பான JCB இலக்கிய அறக்கட்டளையால் நிர்வகிக்கப்படுகிறது.
- இது ஆங்கில மொழியில் எழுதப்பட்ட புனைவுக் கதை அல்லது ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப் பட்ட இந்திய மொழிப் படைப்புகளைக் கௌரவித்தது.
- 2018 முதல் 2024 ஆம் ஆண்டு வரையிலான ஆண்டுகளில் இந்த விருது வென்ற ஏழு வெற்றியாளர்களில், ஐந்து பேர் மலையாளம், தமிழ் மற்றும் உருது போன்ற சில மொழிகளில் உள்ள படைப்புகளை மொழிபெயர்த்தனர்.




## இதரச் செய்திகள்

### அம்புபாச்சி மேளா 2025




- அசாமின் கௌஹாத்தியில் உள்ள காமக்யா என்ற ஒரு கோவிலில் அம்புபாச்சி மேளா என்ற சமய விழா நடைபெற்றது.
- "நீரோட்டம்" என்றும் ஒரு பொருள்படும் "அம்புபாச்சி" என்பது பருவமழை மற்றும் வேளாண்மையின் புதுப்பித்தலுடன் நிகழ்வை இணைக்கிறது.

- ஜூன் மாதத்தில் கொண்டாடப் படும் இந்த முக்கியப் பண்டிகையானது தாந்த்ரீக சக்தி மார்க்கத்தில் ஒரு முக்கியச் சடங்காகும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★